**O.S.No. 260/2018**

**PW1 : சுதா** தேதி 22.01.2026

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கை 6 அயிட்ட சொத்திற்காக தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி 6 அயிட்ட சொத்துகளுக்கும் என் பெயரில் ஆவணம் இல்லை. என் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்களும் இல்லை. பாகப்பிரிவினை செய்து கொடுப்பதாக கூறி என்னை ஏமாற்றிவிட்டதால் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். 28.8.2017 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி நான் அச்சொத்தில் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெற்றிவேல், குமரேசன் என் உடன் பிறந்த சகோதரர்கள். என் அம்மா இறக்கும் வரை என் சகோதரர்கள் பாசமாக இருந்தார்கள். அதன் பின்னிட்டு பேச்சு வார்த்தை இல்லாமல் இருக்கிறோம். 28.8.2017 ல் தானசெட்டில்மெண்ட் பதிவான பின்னிட்டு மேற்படி ஆவணத்தை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டதாக நான் பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. என்னிடம் தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்ட பிறகு எனக்கு தாவா சொத்தில் பங்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என் தம்பி மனைவி 3ம் பிரதிவாதி சுகுணா 4ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்று விட்டார். 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வெற்றிவேல் 2 ம் பிரதிவாதிக்கு அவருடைய சொத்தை தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார். அவ்வாறு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விவரம் மற்றும் சொத்தை விற்ற விவரம் வழக்கு தாக்கல் செய்த பிறகு எனக்கு தெரிய வந்தது. மேற்படி ஆவணங்களை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்

சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் 4ம் பிரதிவாதி கட்டிடம் கட்டினார். தாவா சொத்திற்கான பட்டா சிட்டா வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் தவிர தாவா சொத்திற்கான வேறு பத்திரங்கள் என்னிடம் இல்லை. என் கணவர் இறக்கும் வரை என்னுடன் தான் இருந்தார். உடல் நலம் சரியில்லாம் 47 வயதில் இறந்து விட்டார். என் கணவர் பெயரில் உள்ள சொத்தில் வீடு கட்டியிருக்கிறோம். என் மாமியாரின் நிலத்தை விற்று வீடு கட்டினோம். என் மாமியார் நிலம் எதுவும் விற்க வில்லை என்றும் என் தம்பிகள் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் வீடு கட்டி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது 125 பவுன் நகை மற்றும் ரூ.6 லட்சம் கொடுத்து எனக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல 10 பவுன் நகை தான் போட்டார்கள். 2018 செப்டம்பரில் எனக்கு கார் சீதனமாக 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் கார் இல்லை. சீர் வரிசையும் பெற்று கொண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு நான் தற்போது அதை மறுத்து தற்போது அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யும் படி பாகப்பிரிவினை வழங்கும்படியும் கோருவது தவறானது என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சொத்தை பெற்று கொண்ட பிறகு அந்த சொத்தின் சுவாதீனத்தை எனக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 28.8.2017 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் என் விருப்பத்தின் பேரில் தான் எழுதி கொடுத்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக ஏமாற்றி எழுதி கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுக்கும் வரை என் தம்பிகள் சொத்தை பாகம் பிரித்து கொள்ளவில்லை. பாகப்பிரிவினை பத்திரம் எழுதுவதாக சொல்லி தான் தானசெட்டில்மெண்ட் எழுதி கொண்டார்கள்.

மேற்படி தாவா சொத்துகளை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றும் நான் என் விருப்பத்தின் பேரில் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டேன் என்றும் தற்போது அதை மறுத்து பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.